# டாக்டர் அப்துல் கலாம் மறைந்தார்

இந்திய விண்வெளி ஆராய்ச்சியின் தந்தை என்றழைக்கப்படும் டாக்டர் A.P.J.அப்துல் கலாம் இன்று (27.07.2015) தனது 84ஆவது வயதில் மாரடைப்பால் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

1931 ஆம் ஆண்டு அக்டோபர் 15ஆம் தேதி ராமேசுவரத்தில் ஒரு சாதாரண முஸ்லீம் குடும்பத்தில் பிறந்து, அரசுப் பள்ளியில் தமிழ் மொழிக் கல்வி பயின்று உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானியாக உயர்ந்ததோடு நமது நாட்டின் குடியரசு தலைவராக உயர்ந்தவர் டாக்டர் அப்துல் கலாம். 'கனவு காணுங்கள்' என்று மாணவர்களை அறை கூவி அழைத்ததுடன் மாணவர்களின் கனவு நாயகனாகவே மாறியவர் டாக்டர் அப்துல் கலாம்.

விண்வெளித்துறையிலும், அணு சக்தி துறையிலும் இந்திய இன்று பெற்றுள்ள அனைத்து மேம்பாடுகளுக்கும் இவரது பங்கு அளப்பரியது. இவரது மேலாண்மையும் மிகச்சிறப்பானது என்பதை அவரது பிரபலமான சுயசரிதையான 'அக்னி சிறகுகள்' வெளிப்படுத்தியுள்ளது.

இவர் இருதய மருத்துவர் திரு சோம ராஜு அவர்களுடன் இணைந்து மிகக் குறைந்த விலையில் ஒரு இருதய STENTஐ உருவாக்கியவர் என்பதும் ஒரு சிறப்பம்சம் ஆகும்.

பாரத ரத்னா உள்ளிட்ட பல விருதுகளை பெற்றவர் டாக்டர் அப்துல் கலாம். அவர் 2002 முதல் 2007ஆம் ஆண்டு வரை நம் நாட்டின் குடியரசு தலைவராக மிகச்சிறப்பாக பணியாற்றினார்.

அவர் குடியரசு தலைவர் பொறுப்பிலிருந்து விடுபட்ட பின்னரும் நாட்டில் உள்ள மாணவர்கள் மத்தியில் தனது அனுபவங்களையும், திறமைகளையும் பகிர்ந்து கொண்டே இருந்த மிகப்பெரிய தலைவர். 27.07.2015 அன்று கூட மேகாலாயா மாநிலம், ஷில்லாங்கில் உள்ள இந்திய மேலாண்மை மையத்தில் (INDIAN INSTITUTE OF MANAGEMENT) மாணவர்கள் மத்தியில் உரையாற்றிக் கொண்டிருந்த போதுதான் அவரது உயிரை பறித்த மாரடைப்பு ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

எளிமையின் சின்னமான டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் மறைவு நமது இந்திய நாட்டிற்கு ஈடு செய்ய முடியாது மிகப்பெரிய இழப்பு. அவரது மறைவிற்கு தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் தனது அஞ்சலியை உரித்தாக்கிக் கொள்கிறது. அவரது மறைவால் வாடும் அனைவருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.